Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 159 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஞானசேகரன் | Calling: | கூலி |
| Father's Name: | கண்ணையன் | Religion: | இந்து |
| Village: | சங்கரபுரம் | Age: | 63 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.09.2024

(எதிரிகள் ஆஜர்.)

அ.சா.2 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும். அசா1 ஐ தெரியும். என்ன பிரச்சனை என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது அல்ல, வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

2020ம் வருடத்தில் ஆஜர் எதிரிகள் அசா1 ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அடித்து கொலை மிரட்டல் விடுத்த வழக்கு சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்தை 07.06.2020ம் தேதி மாலை 04.00 மணியளவில் பார்த்து வரைபடம் வரைந்ததற்கு சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் சமாதானமாக செல்வதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> : இல்லை

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ஞானசேகரன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D. Ravi,
Judicial Magistrate(FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 159 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | தனபால் | Calling: | கூலி |
| Father's Name: | கண்ணு | Religion: | இந்து |
| Village: | சங்கரபுரம் | Age: | 74 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.09.2024

(எதிரிகள் ஆஜர்.)

அ.சா.3 முதன்மை விசாரணை

ஆஜர் எதிரிகள் மூவரையும் தெரியும். அசா1, 2 ஐ தெரியும். என்ன பிரச்சனை என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான், அந்த கையெழுத்தை சுமார் நான்கைந்து வருடத்திற்கு முன்பு எங்கள் தெருவில் அமுதா வீட்டாருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே கூச்சல் நடந்தது என சிறுவர்கள் என்னிடம் கூறினார்கள். அந்த சமயத்தில் நான் ஊர் நாட்டாமைகாரராக இருந்தேன். அதனால் போலிசார் என்னிடம் வெற்று தாளில் கையொப்பம் பெற்றார்கள். (**கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

2020ம் வருடத்தில் ஆஜர் எதிரிகள் அசா1 ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அடித்து கொலை மிரட்டல் விடுத்த வழக்கு சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்தை 07.06.2020ம் தேதி மாலை 05.30

மணியளவில் சம்பவ இடத்திலிருந்து சூரி கத்தி ஒன்று மற்றும் 500கிராம் எடையுள்ள கருங்கல்லை கைப்பற்றியதற்கு சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் சமாதானமாக செல்வதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேனா என்றால் ஆமாம். வழக்கு விவரம் எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) தனபால்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./–) D. Ravi,
Judicial Magistrate(FAC), Vaniyambadi.